Registered as a Newspaper

-7 JAN 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2027 மார்கழி 22 திங்கட்கிழமை (06-01-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 41

# ஈ.பி.டி.பி. பணிமனை யாழ். நகரில் திறப்பு

## 11 விடயங்கள் பற்றி உடன் கவனம் எடுக்கப்படும் என்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜனவரி 6

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பியின்) பணிமனை ஒன்று முதல் தடவையாக நேற்று முன்தினம் யாழ். நகரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில், முன்னர் ஸ்ரீதர் தியேட்டர் இயங்கிய கட்டடத்தில் நேற்று முன்தினம் தொடக்கம் இந்த அலுவலகம் செயற்படத் தொடங்கியுள்ளது.

யாழ். குடாநாட்டில் மக்களின் நலனை மேம்படுத்தும் விதத்தில் பதினொரு விடயங்கள் குறித்து தமது கட்சி உடனடியாகக் கவனம் செலுத்தும் என்று அக்கட்சியின் செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பதினொரு எம்.பிக்களில் பத்துப் பேர் அவரின் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈ.பி.டி.பி. கட்சியைத் தொடர்ந்து புளொட் மற்றும் தமிழ்க் கட்சிகள் யாழ். நகரில் அலுவலகங்களை திறக்கவிருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

புதிய அலுவலகத்தைத் திறந்த பின்னர் டக்ளஸ்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# 1997 இல் புலிகளின் யுத்த தந்திரம் சிறப்படையும் என்கிறார் அனுரா!

கொழும்பு, ஜன. 6

★ பொருளாதாரம் மோசமடையும்.

★ யுத்தம் முட்டுக்கட்டை நிலையை அடையும். புலிகள் நின்று பிடிப்பார்கள். அவர்களின் யுத்த தந்திரம் சிறப்படையும்.

★ அரசாங்கத்தின் சகல நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடையலாம்.

★ ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மட்டும் உலக நாடுகளுக்கு விஜயங்களை மேற்கொள்வார்.

1997 எப்படியிருக்கும் என்பது குறித்து ஐ. தே. க. எம்.பியான அனுரா பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு ''சண்டே லீட''ருக்கு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது:-

அதிகாரப் பரவலாக்கல் பொதி தொடர்பாக ஐ.தே.க. மீது நிர்ப்பந்தம் கொண்டு வரவே அரசு கருத்துக் கணிப்பு என்ற தந்திரத்தை பயன்படுத்த முனைகிறது.

பேச்சு மேசைக்கு விடுத

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிப் பாதையைத் திறக்க விரைவில்படை நடவடிக்கை?

கொழும்பு, ஜன. 6

விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையான பாதையைத் திறக்கக் கூடியதான இராணுவ நடவடிக்கை ஒன்றை அரசு விரைவில் மேற்கொள்ளலாம் என்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் பாதுகாப்பு அமைச்சில் உயர் மட்ட மாநாடு ஒன்று நடந்தது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த தலைமையில் நடந்த இந்த மாநாட்டில் முப்படைத் தளபதிகள் மற்றும் பிராந்தியத் தளபதிகள் பங்குபற்றினர்.

வவுனியா — கிளிநொச்சிப் பிரதான விநியோகப் பாதை தொடர்பாக இந்த மாநாட்டில் ஆராயப்பட்டது. விரைவில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பது குறித்து விவாதிக்கப்பட்டது. பாதுகாப்புக் காரணங்களுக்காக மாநாட்டின் முடிவுகள் வெளியிட முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் பல இடங்களில் விடுதலைப்புலிகள் தாக்குதல்

கொழும்பு, ஜன. 6

கிழக்கில் விடுதலைப் புலிகள் பல தாக்குதல்களை நடத்தியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டம் கொக்குத் தொடுவாயில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய போது 5 படையினர் கொல்லப்பட்டார்கள்; 15 படையினர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புலிகளின் இரு ஆயுதங்களை தாங்கள் மீட்டுள்ளனர் என்றும் —

இத் தாக்குதலில் 4 புலிகள் கொல்லப்பட்டனர் என்றும் —

அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு புனாணை ஏழாவது கஜபா இராணுவ முகாமுக்கு அருகில் நேற்று முன்தினம் மாலை [illegible] யளவில் விடுதலைப் புலிகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படை அதிகாரிகள் பலர் விலகுகின்றனர்!

கொழும்பு, ஜன. 6

கடந்த மூன்றாண்டு காலத்தில் கடற்படையில் இருந்து 40 சதவித சிரேஷ்ட அதிகாரிகள் ஓய்வு பெற்றுள்ளனர் என்று 'த ஐலண்ட்' பத்திரிகையின் ஞாயிறு இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

1970, 80 ஆம் ஆண்டுகளில் படைகளில் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகளே ஓய்வு பெறுகின்றனர்.

கடற்படையில் லெப்டினன்ட் தரத்துக்கு மேற்பட்டவர்கள் சிரேஷ்ட அதிகாரிகளாகப் பணியாற்றி வருகின்றனர்.

1994 ஆம் ஆண்டு சிரேஷ்ட அதிகாரிகள் தரத்தில் 74 பேரை வைத்திருக்க அனுமதித்த அரசு, கடந்த வருடம் 162 சிரேஷ்ட அதிகாரிகளை கடற்படையில் வைக்க அனுமதித்தது.

ஆனால் சிரேஷ்ட அதிகாரிகளாக பதவி உயர்வு வழங்க கனிஷ்ட மட்டத்தில் அதிகாரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ரூ. 50 கோடி நஷ்ட ஈடு கோரி அமைச்சர் அஷ்ரப் மீது வழக்கு

கொழும்பு, ஜன. 6

அம்பாறை தீகவாபி விவகாரம் தொடர்பாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் வெளியிட்ட அறிக்கை அவதூறு நிரம்பியதாக அமைந்துள்ளது என்று தெரிவித்து அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் அமைச்சருக்கு எதிராக 50 கோடி ரூபா நஷ்ட ஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளது.

மேற்படி அமைப்பின் செயற்குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

''இனப்பதற்றத்தை ஏற்படுத்தும் எண்ணத்துடன் ஐ. தே. கவின் தூண்டுதலில் தீகவாபி தொடர்பாக சத்தியாக்கிரகம் செய்தனர்' என்ற சாரப்பட அமைச்சர் அஷ்ரப் அறிக்கை வெளிட்டிருந்தார். அந்த அறிக்கையை ரூபவாஹினியிலும் தோன்றி அவர் வாசித்தார்.

''எமது காங்கிரஸ் அரசியல் சார்பற்றது; எந்தக் கட்சியுடனும் எமக்கு தொடர்பில்லை'' — என்று பௌத்த காங்கிரஸ் தலைவர் சுகத் தேவப்புர தெரிவித்துள்ளார்.

(உ-3-150)

## முச்சந்தி முரளி



உதைத்தான் ... .. பொல்லைக் குடுத்து அடி வாங்கிற வேலை எண்டு சொல்லுறது ...... கண்டியளோ......!

# எயர் லங்கா விமானத்தில் குண்டு இருப்பதாகப் புரளி!

## டேர்பனில் ஏற்பட்ட பதற்றம்

கொழும்பு, ஜன .6

கடந்த வியாழக்கிழமை கொழும்பிலிருந்து டேர்பன் வழியாக பிராங்போர்ட் சென்று கொண்டிருந்த எயர் லங்கா விமானத்தில் வெடிகுண்டிருப்பதாக வெளியான தகவல்களை அடுத்து அந்த விமானத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

சம்பந்தப்பட்ட விமானத்தில் பை ஒன்றில் வெடிகுண்டிருப்பதாகத் தகவல்கிடைத்துள்ளது என கொழும்பு அதிகாரிகள் தென்னாபிரிக்காவின் டேர்பன் விமான நிலைய அதிகாரிகளுக்கு தகவல் அனுப்பினர். இதனை அடுத்து அவசர அவசரமாக விமானம் டேர்பனில் தரையிறக்கப்பட்டது; பயணிகளும் விமானத்திலிருந்து விரைவாக அப்புறப்படுத்தப்பட்டனர். விமானம் சோதனையிடப்பட்டது. ஆனால் அங்கு குண்டு எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை.

(உ-3-150)

# கிறீஸ் படகு விபத்தில் 142 ஈழத் தமிழர் பலி?

கொழும்பு, ஜன. 6

கிறீஸுக்கும் இத்தாலிக்கும் இடைப்பட்ட கடல் பிராந்தியத்தில் நத்தார் காலத்தில் இடம் பெற்ற மிக மோசமான படகுவிபத்து ஒன்றில் உயிரிழந்த இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை நூறுக்கு அதிகம் என்று அஞ்சப்படுவதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவிக்கின்றன.

தனியார் பயண முகவர்களின் உதவியுடன் முதலில் எகிப்திய தலைநகரான கெய்ரோவுக்கும், பின்னர் அங்கிருந்து கிறீஸ் மார்க்கமாக இத்தாலிக்கும் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்ட போதே இந்த விபத்து இடம் பெற்றிருக்கின்றது.

எகிப்திலிருந்து இத்தாலி நோக்கிப் புறப்பட்ட அணியில் இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம் மற்றும் இலங்கையைச் சேர்ந்த 454 பேர் இருந்தனர்.

இவர்களை ஏற்றிக் கொண்டு கடந்த 9ஆம் திகதி கப்பல் ஒன்று புறப்பட்டது. வழியில் இவர்கள் மேலும் இரண்டு கப்பல்களுக்கு மாற்றி ஏற்றிச் செல்லப்பட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW SCIENCE ACADEMY
## NALLUR
# 98,99 A/L
## 97 A/L மீட்டல்
## கலை, வர்த்தக வகுப்புகள்

| | | |
|---|---|---|
| பொருளியல்: | — | திரு. கருணாகரன் |
| வர்த்தகம் | — | திரு. உதயமோகன் |
| கணக்கியல்: | — | திரு. பாலவாசன் |
| அளவையியல்: | — | திரு. யுகபாலசிங்கம் |
| தமிழ்: | — | திரு. தங்கராஜா |
| இந்துநாகரிகம் இந்துசமயம் | ]— | திரு. சிவமகாலிங்கம் |
| வணிகப்புள்ளி விவரவியல்: | — | திரு. ஜெயக்குமார் |
| புவியியல்: | — | பிரபல ஆசிரியர் |

**ஆரம்பம்: 09-01-1997**
வியாழன் பிற்பகல் 3-00 மணி

(44540)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகம்மா வைத்திலிங்கம்

அளவெட்டி வடக்கைச் சேர்ந்தவரும் தற்பொழுது வவுனியாவில் வசித்தவருமான திருமதி நாகம்மா (நல்லம்மா) 4-1-97 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் நா.வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், கைலைநாதன் (கூட்டுறவுப் பரிசோதகர், முல்லைத்தீவு), பாலச்சந்திரன், பாலேந்திரன், திருமதி கலாவதி (சுவிற்சலாந்து), செல்வி Dr.லலிதா (யாழ்.போதனா வைத்தியசாலை), செல்வி கமலராணி (ஆசிரியை மல்லாகம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயலட்சுமி, சறோஜினிதேவி, பத்மலோசனி, ராதாக்கிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை (07-1-97) வவுனியாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
**வை. லலிதா**
(மகள்)

(44534)

## திருமதி செல்லம்மா நடராசா

திருநெல்வேலி காளி கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சின்னத்தம்பி நடராசா அவர்களின் அன்பு மனைவி திருமதி செல்லம்மா நடராசா அவர்கள் 5 - 1 - 97 இல் காலமானார்.

அன்னார் திருமதி புவனேஸ்வரி சுப்பிரமணியம், சுந்தரமூர்த்தி (சவுதி), திருமதி சந்திராதேவி சண்முகராசா, சற்குருநாதன் (குரு) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியம், சண்முகராசா, செந்தில்வதனா, மங்கையர்க்கரசி ஆகியோரின் மாமியாரும், பாக்கியம், சுப்பிரமணியம், இரத்தினம், இராசையா ஆகியோரின் சகோதரியும், தம்பிஐயா, மயில்வாகனம், காலஞ்சென்ற பொன்னுச்சசாமி மற்றும் பராசக்தி, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, தவமணி ஆகியோரின் மைத்துனியும், ஷைலா, கார்த்திகா, காண்டீபன், லவஜீவன், பானுலதா, நிரோஜன், சண்முகப்பிரியா, ஹேமப்பிரியா, பானுப்பிரியா, மோகனப்பிரியா, திர்ஷிகா, சரண்யா, வர்க்கீசன், விதுர்சன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (6 - 1 - 97) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.30 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்களை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**ந. சற்குருநாதன் (குரு)**
(மகன்)
(சிற்ப ஆசிரி, கிர்த்தியா கலைக்கூடம்)

காளி கோயிலடி,
திருநெல்வேலி.

(44538)

## வைத்திலிங்கம் ஞானசேகரம்

(முன்னாள் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்-யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், இல. 134, பிறவுண் வீதியில் வசித்தவரான வைத்திலிங்கம் ஞானசேகரம் 03 - 01 - 97 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், Dr. ஜெகமோகன் (குருநாகல்), ஜெகராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. நிரஞ்சனாவின் (கல்கமுவ) அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05 – 01 - 97 இல் கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**செ. நாகம்மா (மாமி)**
**செ. குமாரசூரியர் (மைத்துனர்)**

441, கே. கே. எஸ். வீதி,
சிவலிங்கப் புளியடி,
யாழ்ப்பாணம்.

(44537)

## யாழ். இந்து சாதனை

யாழ்ப்பாணம், ஜன. 6

சில தினங்களுக்கு முன்னர் வெளியான — 1996/1997 கல்வியாண்டுக்குரிய — பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து ஒரே சமயத்தில் 125 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியிருக்கின்றார்கள். இது ஒரு சாதனையாகும்.

பொறியியல் I இற்கு 31 மாணவர்கள், பொறியியல் II இற்கு 09 மாணவர்களுமாக மொத்தம் 40 பேரும் —

மருத்துவத்துறையில் இருபது பேரும் —

ஒரே சமயத்தில் அனுமதி பெற்றிருப்பது யாழ். குடாநாட்டில் ஒரு சாதனையாகக் கருதப்படுகின்றது.

இது தவிர, பௌதிக விஞ்ஞானத்துக்கு 38 பேரும், விவசாய விஞ்ஞானத்துக்கு 10 பேரும், உயிரியல் விஞ்ஞானத்துக்கு 03 பேரும், முகாமைத்துவம் I இற்கு 06 பேரும், வர்த்தகத்துக்கு 06 பேரும் முகாமைத்துவம் II இற்கு 02 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

1995 ஓகஸ்டில் நடைபெற்ற ஜி. சீ. ஈ. (உயர் தர) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது இந்தப் பரீட்சையில் யாழ். இந்துவைச் சேர்ந்த பத்து மாணவர்கள் நான்கு பாடத்திலும் 'ஏ' சித்தி பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. கல்லூரி அதிபராக திரு. அ. பஞ்சலிங்கம் இருந்த காலத்தில் இந்தப் பெறுபேறு கிடைக்கப்பெற்றது. (உ)

## இலங்கையரை தேடி வேட்டை

இலங்கையில் இருந்து தனுஷ்கோடிக்கு வந்த கண்ணாடி இழைப் படகு ஒன்றை இராமேஸ்வரம் காவல்துறையினர் நேற்று முன்தினம் கைப்பற்றினர்.

இந்தப் படகில் இருந்து இறங்கிச் சென்றதாகக் கூறப்படும் 6 இலங்கை நாட்டவர்களை காவல் துறையினர் தேடி வருகின்றனராம். இதன் காரணமாக இராமநாதபுரத்தில் உள்ள அனைத்து சோதனைச் சாவடிகளும் உஷார் படுத்தப்பட்டுள்ளன.

(உ-3)

## 3 இந்தியரும் விசாரணையில்!

போதைப்பொருள் கடத்தி வந்த வேளையில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்று முன்தினம் பிடிபட்ட 3 இந்தியப் பிரஜைகளும் மேல்விசாரணைக்காக போதைப் பொருள் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைப்பற்றபட்ட போதைப் பொருளின் பெறுமதி சுமார் 90 லட்சம் ரூபாவென பொலீஸார் கூறுகின்றனர்.

சென்னையில் இருந்து இப்போதைப் பொருளைக் கடத்தி வந்த இந்த மூவரில் இருவர் பெண்களாவர்.

(உ-3)

## உருளைக்கிழங்கு செய்கையாளர் கருத்தரங்கு

அராலி. ஜன, 6

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் புதன்கிழமை காலை10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

இப்பகுதியில் 79 விவசாயிகள் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு 200 பெட்டி விதை உருளைக்கிழங்கு வழங்கப்பட்டுள்ளது. (இ-12)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செ. செல்வநாயகி

அரியாலையைச் சேர்ந்த செல்வநாயகி (05- 01- 97) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் - நாகலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும், ஜனார்த்தனனின் அன்புத் தாயாரும், பத்மநாதன், சிவலோகநாதன், ராஜகோபால், இந்திராணி, புனிதவதி, சற்குணநாயகி, ராதாகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரியும் நித்தியலட்சுமி, மேனகா, பாசதாசன், இந்திரன் ஆகியோரின் மைத்துனியும், தனலட்சுமி, முத்துராணி காலஞ்சென்ற நாகேஸ்வரி (பேபி) ஆகியோரின் மருமகளும், குருசாமியின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (06 - 01 - 97) இன்று திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஜனார்த்தனன்**
(மகன்)

90, புங்கன்குளம் வீதி,
அரியாலை.

(44533)

## செல்லையா சிதம்பரநாதன்

(கடைக்காரச் சின்னத்துரை)

அரியாலையைச் சேர்ந்த செல்லையா சிதம்பரநாதன் (05-01-97) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லையா தங்கம்மா தம்பதிகளின் மகனும், கோவிந்தபிள்ளை இராசமணி தம்பதிகளின் மருமகனும், தேவசேனாவின் அன்புக் கணவரும், தேவநாதன் (ஜேர்மனி), பவானி, சாந்தினி (நோர்வே), தயானி, ரஜனி (நோர்வே) விஜயநாதன் (நோர்வே), சுரேந்தினி (யா/பல்கலைக் கழக 3 ஆம் வருட கலைப்பீடமாணவி), சஞ்சயநாதன் (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோராணி (ஜேர்மனி), சுதர்சன் (ஜேர்மனி), சிறிகரன் (நோர்வே), யோகேந்திரன், உமாகரன் (நோர்வே) தமிழரசி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற நேமிநாதன், கனகரத்தினம், திருச்செல்வம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(06-01-97) திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
**மனைவி, பிள்ளைகள்.**

9/6, மலர்மகள் வீதி,
அரியாலை.

(44525)

## வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
## (சுப்பையாவண்ணை)

அளவெட்டி தெற்கு மாரிட்டியைச்சேர்ந்த வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் 04-01-1997 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், நாகம்மா, பாலச்சந்திரன் (பிரான்ஸ்), தில்லைநாதன் (பிரான்ஸ்), குகதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா, மஞ்சுளாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும். றம்யா, ரஷித் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05-01-1997 ஞாயிற்றுக்கிழமை அளவெட்டி வைரவர் அடைப்பு மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**நாகம்மா**
(மகள்)

தற்போதைய முகவரி:
தம்பளாவத்தை,
அளவெட்டி மேற்கு.

(44523)

## கயிலாசபிள்ளை வேல்முருகன்
## (வடிவேல்)

(வேலணை - 6)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது இல 82/56, இராமநாதன் தொடர் மாடி, கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13 இல் வசித்தவருமான வடிவேல் என அழைக்கப்படும் கயிலாசபிள்ளை வேல் முருகன் 4-1-97 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கயிலாசபிள்ளை மற்றும் பரமேஸ்வரியின் அன்பு மகனும், குரும்பசிட்டி சிங்கராசா இரத்தினத்தின் அருமை மருமகனும், லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், நிதர்சன் (ஜேர்மனி), சுகந்தன், சுவீதன், நிரோஜா, நிசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரகலாதனன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைச் சகோதரனும், கேசவராணி (ஜேர்மனி), விஜிதா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை மற்றும் சாந்தலிங்கம் (தம்பு) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புதன்கிழமை (8-1-97) கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**தி. பாலச்சந்திரன்**

இல 50, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(44535)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணை நம்பி வாழ்ந்த தென்மராட்சி பகுதி மக்களின் கண்ணீர்க் கதை இது

'மண்ணை நம்பி வாழ்ந்த தென்மராட்சி மக்களின் கண்ணீர்க்கதை' என்ற தலைப்பிட்டு, 'வயோதிப மாது ஒருவர் கேசரிக்கு எழுதிய கடிதம் இது...' என்ற குறிப்புடன் கொழும்பிலிருந்து வெளியாகும் 'வீரகேசரி' பத்திரிகை அண்மையில் பிரசுரித்த கடிதம் இது. அப்படியே இங்கு மறுபிரசுரஞ் செய்யப்படுகின்றது.

1995ஆம் ஆண்டு அக்டோபர் கண்ணீரும் கம்பலையுமாக கையில் கிடைத்த பொருள்களுடன் மழையில் நனைந்து, வெள்ளத்தில் நடந்து சேற்றில் அமிழ்ந்தி, வானத்தில் வரும் போர் விமானங்களுக்கு உயிரைக் காக்க ஒதுக்கிடம் தேடிவந்த மக்களுக்கு முடிந்தவரை இடமளித்து உணவளித்து இன்முகங் காட்டி வரவேற்ற தென்மராட்சி மக்கள் இன்று கண்ணீரில் கரைகிறார்கள்; கையேந்தும் நிலையில் அழுகிறார்கள்.

'நாங்கள் நல்லம் தானே! இப்போ நல்லம் தானே' என்று கொச்சைத்தமிழ் பேசி வந்த இராணுவம் இன்று என்ன செய்கிறது? யாரிடம் சொல்லமுடியும்? யார் எமது கதையை கேட்பார்கள்? இந்தக் கொடுமையிலும் பார்க்க இவர்கள் ஒரு குண்டைப் போட்டு ஒரேயடியாக எம்மைக் கொன்றிருக்கலாமே— என்று சொல்லாத மக்கள் இல்லை.

நீண்டதொரு அணையைப் போட்டு, அதன்மேலே வேலியை அடைத்து, அந்த வேலியோரங்களில் காவலரண்களையும் பதுங்குகுழிகளையும் அமைத்துக் கொண்டார்கள். அணைக்கு வெளிப்புறமாக நூறுமீற்றருக்கு அப்பால் கம்பி வேலிகள். எங்களைக் காக்க வந்த 'இளம் சிங்கங்களாம்' கைகூப்பினார்கள்; கைகொடுத்தார்கள்; சிரித்தார்கள்.

ஆனால் அணையைப் போடும்போது பயங்கர இரைச்சலுடன் வந்த அந்த கொடியஇயந்திரம்தென்னை, பனை, பலா, மா, கொய்யா மரங்களை பெயர்த்து எறிந்து பேரிரைச்சலுடன் அழிவு அரக்கனாக செயற்பட்டது. அதன் பின் அணைக்கு அருகில் போடும் காவலரண்களுக்காக தென்னைகள், பனைகள் தறித்து வீழ்த்தப்பட்டன. 'மரம் நடுவோம்' என மாநிலமெல்லாம் கூறும் இன்றைய, உலகில் மரங்களைத் தறித்து பாலைவனமாக்கி மகிழும் அந்த 'இளம் சிங்கங்கள்' செய்வது நியாயமா?

அதன் பின் புலிகள் இயக்கத்தினர் தம்மை மறைந்திருந்து தாக்குவார்கள் என்பதற்காக வளர்ந்து வரும் இளம் தென்னம்பிள்ளைகளை வெட்டி ஒற்றை ஓலையுடன் நிற்க வைத்தார்கள். வெட்டிய ஓலையை மாமரம் பலா மரங்களுக்கு கீழே போட்டு கொழுத்தினார்கள். பச்சை மரங்கள் எரிந்து கருகி சாம்பலாயின. நாம் செய்த பாவம் அந்த மரங்களையும் பிடித்துக் கொண்டது.

ஆசையாய் நேசமாய் பேசி, கஞ்சியோ கூழோ குடித்து கவலைப்படாமல் வாழ்ந்த மக்களை அகதிகளாக்கி, அடிமைகளாக்கி, அல்லற்படுத்துவதில் என்ன ஆனந்தமோ? அணைக்கு வெளிப்புற முந்நூறு மீற்றர் வரை உள்ளவர்களை குடிபெயரச் சொன்னார்கள். அவர்கள் குடிசைகளைக் கொளுத்தி வேடிக்கை பார்த்தார்கள். நல்ல வீடுகளின் கூரைகள், கதவுகள் எல்லாம் அவர்கள் காவலரண்களுக்காகபெயர்த்தெடுத்தார்கள். இந்தக் கொடுமைகள் மட்டுமா; அணைக்கு வெளிப்பக்கம் தோட்டம் செய்தவர்கள் அந்தப்பக்கம் போகக் கூடாது; போனால் உள்பக்கம் வரக் கூடாது. வயிற்றுப்பாட்டுக்கு என்ன வழி?

இரவு பகல் பாராது கிடுகு பின்னும் பெண்கள் தென்மராட்சிப் பெண்கள். நூறு ஓலை பின்னி விட்டால் நூறு ரூபா கிடைக்கும். அதுவே பெரியகாசு. இப்போ அதுவும் கிடையாது. தென்மராட்சியின் கிடுகு வலிகாமத்துக்குப் போக முடியாத நிலை. வழியில் உள்ள தடை முகாம்களில் ஏற்றிய கிடுகை பறித்துக் கொட்டி, மறுபடி வண்டியிலேற்றி ... இப்படி எத்தனை முறை செய்ய முடியும்?

இருபது பரப்பு தென்னங்காணியுள்ள வளவில் அரைவாசி செலவுக்கு வருமானம் எடுக்க முடியும். கோம்பை, தென்னைமட்டை, பாளை அத்தனையும் விற்று காசாக்கி சந்தோஷமாய் வாழ்ந்தவர்கள் இன்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்ளும் நிலை. நாலு இளநீர் தேவைப்பட்டால் பத்து இளநீரை பிடுங்கி வீசும் இராணுவத்தினரைப் பார்க்கும் போது நெஞ்சு அடிக்காமல் என்ன செய்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் எச்சரிக்கை மாநாடு மதுரையில்

மதுரை, ஜன. 6

இலங்கை ஆயுதப்படைகளுக்கு பயிற்சியும் ஆதரவும் அளித்துவரும் அமெரிக்காவின் செயல் குறித்து தமிழ் மக்களின் ஒட்டுமொத்த கண்டனத்தைத் தெரிவிப்பதற்காக "தமிழர் எச்சரிக்கை மாநாடு" என்ற பெயரில் ஒரு மாநாடு இம்மாதம் 19 ஆம் திகதி மதுரையில் நடைபெறவுள்ளது.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு நடத்தும் இம் மாநாட்டுக்கு நெடுமாறன் தலைமை வகிப்பார்.

அகில இந்திய சமதாக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோர்ஜ் பெர்னான்டஸ், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசர் வி. ஆர். கிருஷ்ண ஐயர், மகாராஷ்டிர மாநில உள்துறை அமைச்சர் பிரபாகர் மோறே, தமிழகத் தலைவர்களான வீரமணி, கோபாலசாமி, டாக்டர் ராமதாஸ், சாலை இளந்திரையன், மணியரசன் ஆகியோர் மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். (இ-10)

# போதைவஸ்து தொடர்பாக கடந்த ஆண்டு 10,877 பேர் கைது

கொழும்பு, ஜன. 6

கடந்த ஆண்டு போதைவஸ்துக்களைப் பயன்படுத்தியது, கொண்டு சென்றது, வியாபாரத்தில் ஈடுபட்டது தொடர்பாக 15 வெளிநாட்டவர்கள். உட்பட 10 ஆயிரத்து 877 பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டவர்களில் 13 பேர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் மற்றைய இருவரும் பிரான்ஸையும் மலேசியாவையும் சேர்ந்தவர்கள் என போதைவஸ்து தடுப்பு பொலீஸ் பிரிவினர் தெரிவித்தனர். (இ-10)

# சவூதி அரேபியாவில் இலங்கைத் தூதரகம்

சவூதி அரேபியாவிலுள்ள ஜெட்டா நகரில் சிறிலங்காவின் தூதரகம் ஒன்று விரைவில் திறக்கப்படும் என சுகாதார, நெடுஞ்சாலை அமைச்சர் ஏ. எச். எம். பௌசி தெரிவித்தார்.

சவூதி அரேபியாவில் பணியாற்றும் சுமார் 50 ஆயிரம் இலங்கையரின் வசதி கருதியும், ஹஜ் பயணத்தில் ஈடுபடும் யாத்திரிகர்களின் வசதி கருதியும் சிறிலங்காவின் தூதரகத்தை திறப்பதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என அமைச்சர் பௌசி தெரிவித்தார்.

சவூதி அரேபியாவிலிருந்து சிறிலங்காவுக்கு தொலைபேசித் தொடர்புகளை மேற்கொள்ளும் போது ஒரு நிமிடத்திற்கு 14 சவூதி றியால்கள் அறவிடப் படுவதாகவும் இந்தக் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பாக தான் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் பௌசி தெரிவித்தார்.

## விலை அதிகரிப்பு

முட்டையின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

மீளக் குடியமர்வின் பின்னர் இடைக் காலத்தில் முட்டையின் விலை சற்று இறங்கியிருந்த போதிலும் நத்தார், புத்தாண்டு பெருநாள்களை முன்னிட்டு திரும்பவும் முட்டையின் விலை உயர்ந்துள்ளது.

தற்சமயம் முட்டை ஒன்று 18 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. (இ-145)

# சிவில் நிர்வாகம் என்றால் என்ன? அது ஏற்பட இங்கு வாய்ப்புண்டா?

சிவில் நிர்வாகம் என்றால் என்ன என்பது குறித்து கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று அளித்த விளக்கம் இது.

சிவில் நிர்வாகம் பற்றித் தற்காலத்தில் மிகுதியும் பேசப்படுகிறது. சிவில்நிர்வாகம் என்றால் என்ன? அத்துடன் தொடர்புடைய வேறு விடயங்கள் எப்படி அமையும் என்பதை நாம் அறிந்து கொள்வது மிக முக்கியமாக இருக்கிறது.

### இருவகை நிர்வாகங்கள்

உலக நாடுகளுள் பல ஜனநாயக முறையிலான நிர்வாக அமைப்பைக் கொண்டுள்ளன. வேறு சில நாடுகளிலோ 'மிலிற்றரி' அரசாங்கம் அமைந்துள்ளது. ஜனநாயக நாடுகளில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் நாட்டுக்குத் தேவையான சட்டங்களை இயற்றிச் சாதாரண 'சிவிலியன்' களாகிய- பொருத்தமான தகுதிகளையும், தகைமைகளையும் கொண்ட அதிகாரிகளின் மூலம் நாடாளுமன்றத்தில் ஆக்கப்பட்ட சட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றனர்.

இந்த செயற்பாட்டில் ஆயுதப் படையினருக்கோ அதன் தலைவர்களுக்கோ ஆணையிடும் அதிகாரம் எச்சந்தர்ப்பத்திலும் இருப்பதில்லை. பொலீஸ் அதிகாரிகளும் சாதாரண பொலீஸாரும் சில இடங்களில் நிலை கொண்டிருப்பராயினும் அவர்களுடைய செயற்பாடுகள் அவ்வப் பகுதிக்குப் பொறுப்பாக உள்ள சிவில் நிர்வாகத் தலைவர்களின் ஆணையைப் பெற்றே நடைபெறும்,

ஆனால் 'இராணுவ ஆட்சி' யின் கீழ் நிலைமை வேறு, சிவில் சேவையைச் சேர்ந்த அதிகாரிகள் நிர்வாகக் கடமையைச் செய்த போதிலும் ஆயுதப்படைத் தலைவர்களே சட்டங்களை இயற்றுவர். அவர்களின் ஆணையின் படிதான் சிவில் நிர்வாகிகள் நடப்பர்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் எப்போதும் இராணுவ ஆட்சி அமையவில்லையாயினும் துரதிர்ஷ்டவசமாக கடந்த சில ஆண்டுகளாக வடக்கிலும் கிழக்கிலும் நடைமுறையிலே இருப்பது ஆயுதப் படையினரின் ஆட்சியே. இங்குள்ள சிவில் நிர்வாகத் தலைவர்களுக்கே ஆணையிடும் அதிகாரம், அந்தந்தப் பகுதிகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள ஆயுதப் படை தளபதிக்குண்டு. அவர்கள் தீர்மானித்தால் பாடசாலைகளை மூடலாம்: பஸ்கள் ஓடாமல் செய்யலாம்; புகையிரதத்தை குறிப்பிட்ட இடத்துக்கே திருப்பி விடலாம். ஜே.ஆர். ஜயவர்த்தன கூறியதுபோல்: ஆணைப் பெண்ணாக்கவும் பெண்ணை ஆணாக்கவும் முடியாதே தவிர, மற்றெல்லாம் வல்லவர்கள் இங்குள்ள ஆயுதப் படையினர்.

### சிவில் நிர்வாகிகள் யார்?

முன்னர் முதல் நிலையில் மாகாணங்களுக்கு பொறுப்பாக இருந்த அரசாங்க அதிபர்கள் தற்போது மாவட்ட அரசாங்க அதிபர்கள்; அவர்களுக்கு அடுத்த நிலையில் இருந்தவர்கள் டீ. ஆர். ஓ. என அழைக்கப்பட்ட பிரிவுக் காரியாதிபர்கள், தற்போது அவர்கள் டி. எஸ். என்றழைக்கப்படும் பிரிவுச் செயலாளர்கள்; அதற்கடுத்த படியில் இருந்தவர்கள் கிராம அதிகாரிகள் அல்லது விதானைமார், தற்போது அவர்கள் ஜீ. எஸ். ஓ. அல்லது கிராமசேவக உத்தியோகத்தர்கள் — இவர்கள் தான் சிவில் நிர்வாகிகள்.

மாகாண அரச அதிபர்கள் பல்வேறு திணைக்களத் தலைவர்களிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுத் தத்தமது எல்லைக்குட்பட்ட பகுதிகளுள் அவற்றை நடைமுறைப்படுத்தி உதவினர்.

### மக்களின் பாதுகாப்பு

குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்களின் பாதுகாப்பிற்கு அவ்வப்பகுதியில் நிலை கொண்டிருக்கும் பொலீஸ் படையினரே முற்று முழுதான பொறுப்புவாய்ந்தவர்களாக இருந்தனர். அடக்க முடியாத பெருங்கலவரங்களை அடக்குவதற்கு மட்டுமே ஆயுதப்படையினர் தருவிக்கப்படுவது மரபு. இது தவிர பூகம்பம், சூறாவளி, பெருவெள்ளம் போன்ற அனர்த்தங்கள் நிகழும் போதும் மக்களையும், மக்களினதும், அரசாங்கத்தினதும் உடைமைகளையும் பாதுகாப்பதற்குமே (கொல்வதற்கும், அழிப்பதற்குமல்ல) ஆயுதப் படையினர் அழைக்கப்படுவர். இவையே சாதாரணமான சிவில் நிர்வாகத்தின் சில கூறுகள் என்பதைச் சுதந்திரத்துக்கு முன்னரும் பின்னரும் வாழ்கின்ற அறிவார்ந்த மக்கள் ஒத்துக்கொள்வர். இப்படியான தன்மைகளைக் கொண்ட 'சிவில் நிர்வாகம்' இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் எந்தவொரு மூலையிலாவது நடைமுறையில் இருக்கிறதா? இல்லவேயில்லை.

பாதைகள் செப்பனிடப்படலாம்; அதன் மேல் பிரயாணிகள், வாகனங்கள் பிறவும் செல்லலாம்; பாடசாலைகள்நடைபெறலாம்; வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கலாம்; கடைகள் சந்தைகளில் கொள்ளல் — கொடுத்தல் நடைபெறலாம்; காரியாலயங்கள் சகலதும் கருமங்கள் செய்யலாம்; வங்கிகள் பணக் கொடுக்கல் வாங்கல் செய்யலாம்; தபால் நிலையங்களில் வேலைகள் தடையின்றி நடைபெறலாம்; இவையெல்லாம் ஒன்று சேர்வதைச் சிவில் நிர்வாகத்தின் உருவம் எனக் கொள்ளலாமா? 'இராணுவ' நிர்வாகத்திலும் இவையெல்லாம் நடைபெறுகின்றனவே. ஆகவே, இவை சிவில் நிர்வாகத்துக்கான எடுத்துக்காட்டாகக் கொள்ள முடியாதவை. ஆனால், இவையெல்லாம் நடைபெறுவது யாருடைய பணிப்பின் கீழ்; யாருடைய ஆணையின் கீழ், என்பதுதான் சிவில் நிர்வாகமா? 'இராணுவ' நிர்வாகமா? என்பதை நிர்ணயிக்கும் அளவு கோலாகும்.

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்தல்களை நடத்தி அச்சபைகள் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளால் நடத்தப்பட்டாலும் கூட ஆணையிடும் அதிகாரம் படையினரிடமே இருக்கும். குறிப்பிட்ட பிரதிநிதிகளும், சபைகளும் பொம்மைகளாக இருக்கவேண்டியது தான். அதனை சிவில் நிர்வாகம் என்றழைப்பது பொருத்தமுடையதாக இருக்காது.

★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தினமும் நான்கு லீற்றர் பால் கறக்கக் கூடிய யமுனா பாறி ஆடு விற்பனைக்குண்டு. தொடர்பு: கல்யாணி நவீன சந்தை உட்புறம்—சாவகச்சேரி. (சி/3867)

### திருமண சேவை

துர்க்கா திருமண சேவை 188, நாவலர்வீதி, பிறவுண் றோட் சந்தி, யாழ்ப்பாணம். சகல மதத்தவர்களுக்கும். படம் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். (9148)

### அக்கரைச் சீமையில்

கவலைகளை மறந்து இங்கிலாந்து போய் வர, 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாவலை வாசியுங்கள். காதல் திறில் எல்லாம் உண்டு. ரூபா 25. பூபாலசிங்கம் புத்தக சாலை. (44377)

## மருந்து கலவையாளர் பற்றாக்குறை

வடமராட்சி, ஜன. 6

யாழ். குடாநாட்டு அரசினர் வைத்தியசாலைகளில் மருந்துக் கலவையாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள கிராமிய மத்திய மருந்தகங்களில் கடமையாற்றிய மருந்துக் கலவையாளர்கள் பலர் இளைப்பாறிச் சென்றுள்ளதால் மருந்துக் கலவையாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

(இ-173)

## ஆசிரியர் தேவை

ஆண்டு 6, 7, 8 வகுப்புகளுக்கு கற்பிக்கக் கூடிய அனுபவமுள்ளவர்கள் 10 - 01 - 1997 3-5 மணிக்கு இடையில் சகல ஆவணங்களுடன் நேரில் சமுகம் அளிக்கவும்.

-நிர்வாகி

**விக்னா**

கல்விநிறுவனம்

(44527

## வைத்தியம்

செங்கமாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூல வியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை

வைத்திய கலாநிதி,

**சி. இராசரத்தினம்**

121, 2ஆம் குறுக்குத்தெரு.

யாழ்ப்பாணம்.

(44528)

## SPOKEN ENGLISH

bY: BRITTO

பாடசாலை செல்லும்

A/L மாணவர்கட்கானது

ஆரம்பம்: 07 - 01 - 97

2-30 p.m

**சிவாகி**

கல்வி நிலையம்

சாவகச்சேரி.

(44525)

## அன்பான வேண்டுகோள்!

இன்றிலிருந்து சகல வர்த்தகர்களும் கீழ்த் தரப்பட்டுள்ள விலைக்கு மேல் தயவுசெய்து விற்பனைசெய்ய வேண்டாம் எனத் தாழ்மையாக வேண்டுகின்றோம்.

| | | மொத்தவிலை | சில்லறைவிலை |
|---|---|---|---|
| (1) உருளைக்கிழங்கு | 1 கிலோ | 70.00 | 80.00 |
| (2) சீனி | 1 கிலோ | 38.00 | 40.00 |
| (3) யானைச்சோடா | வகைகள் | 20.00 | 23.00 |

சகல வர்த்தகர்களும் விலைப்பட்டியல் தொங்கவிட வேண்டும்.

நிர்வாகம்,

(44521) யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

# றேடியன்ற் கல்வி நிலையம்

கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

ஆண்டு 6 முதல் O/L வரை

**புதிய இரண்டாவது பிரிவுகள்**

ஆரம்பம்: 07 - 01 - 1997 பி. ப. 2-30

★ கணிதம் — திரு. B. கிருபாகரன், திரு. வசந்தன்

★ விஞ்ஞானம் — திரு. பி. றூபேந்திரன், திரு. எஸ். ஜஸ்ரஸ், திரு. எஸ். சிவயோகன்

★ தமிழ் — திரு. எம். ஜெயராமன், திருமதி ஏ. மீரா, செல்வி ரீ. சுசிகலா

★ வரலாறும் - சமூகக்கல்வியும் — திரு. கே. எஸ். முத்துலிங்கம், திரு. எஸ். ராஜேந்திரன்

★ ஆங்கிலம் — திரு. எஸ். கே. மகாலிங்கம், செல்வி எஸ். சுகந்தி

★ வர்த்தகம் — திரு. கருணாகரன்

★ இந்துசமயம் — செல்வி எஸ். ரஜனி

★ கிறிஸ்தவம் — செல்வி என். ரஞ்சி

-- நிர்வாகி.

(44526)

# 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



## திருமதி பிறைசூடி இராஜேஸ்வரி

(பவா)

**திதி: 06 - 01 - 1997**

அன்னை மடியில்: **27—07—1951** ஆண்டவன் அடியில்: **02—12—1992**

அன்பு அம்மாவே.........
நீங்கள் பெற்றவர்கள் கதறிட
உற்றார் உறவினர் கலங்கிட
பொல்லாத நோய் வந்து
சொல்லாமல் கொண்டு சென்று
நான்கு ஆண்டுகள் சென்றனவோ.........
நம்பமுடிய வில்லையம்மா... ...
என்றும் உங்கள் நினைவு எம்மைவிட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல நல்லூரானை வேண்டி கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:

கணவர், பிள்ளைகள், சகோதரகள், சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

62, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம். (44512)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 07 — 04 — 1949



மறைவு: 09 — 12 — 1996

## அமரர் தம்பிராசா தர்மலிங்கம்

அன்பாகவும் பண்பாகவும் எம்மை வளர்த்து அறிவூட்டி எம்மை ஆளாக்கிய எங்கள் அருமை அப்பாவே! எங்களைத் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்? எங்கள் உயிர் உள்ளவரை நினைவுகள் என்றும் எம் மனங்களில் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

08-01-97 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பிரிவால் துயருறும்:

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்.

பாலாவி தெற்கு,
கொடிகாமம்.

(சி/3865)

# நினைவலைகளும் - அந்தியேட்டி அழைப்பும்

அன்னையின் மடியில்: 16 — 09 — 1974



ஆண்டவன் மடியில்: 09 — 10 — 1996

## செல்வன் இராசதுரை ஜயசிவானந்தன்

(மாணவன் - சித்தமருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

தொண்ணூறு நாளல்ல தொல்லையது தீர்ந்தாலும்
இளவல் உந்தன் இளநகையும் மலர் வதனமும்
கம்பீர நடையும் கண்ணியமான பேச்சும்
எம் நெஞ்சை விட்டு அகலாதப்பா!
மாற்றான் நின் உயிர் கேட்க மறுக்காது சென்று நீயும்
எமக்கு மாறாத் துயர் கொடுத்து மீளாத்துயில்
கொண்டனையோ!

மலர்வு: 16 — 03 — 1932



உதிர்வு: 02 — 12 — 1996

அமரர்

## கிருஷ்ணர் இராசதுரை

பெற்றவனைப் பாதியிலே பிரிந்திட்ட சோகத்தாலும்
உற்ற துணை அவனுக்கு விண்ணிலே தேடி
மற்றவர் நாம் யாபேரும் தவியாய்த் தவித்திட
புத்தி சொல்லிப் பத்திரங்கள் காத்து நின்று
எமையெல்லாம் வழி நடத்தும் தெய்வம் நீ
பாதியிலே விட்டுப் பரமனடி சென்றதேனோ?

இன்று அன்னார்களது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-- அன்னாரது குடும்பத்தினர்.

எச்சாட்டி வைரவ [illegible] மானிப்பாய். [44513]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலில் நாடாளுமன்றத்துக்கே தெரிவுக்குழுவின் யோசனை வரும்

கொழும்பு, ஜன, 6

'அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப் பட்ட பின்னரே அவற்றை மக்கள் தீர்ப்புக்கு விடுவதென தற்போது முடிவு செய்யப் பட்டுள்ளது'.

இப்படி நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

மாத்தறையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் பற்றிய விவாதங்களை நாடாளுமன்றத் தெரிவுக் குழு மார்ச் மாதத்துக்கு முன் பூர்த்தி செய்யும் என்று நம்புகிறோம்.

அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் பணத்தைப் போல மூன்று மடங்கு அதிகமான பணம் யுத்தத்துக்குச் செலவிடப்படுகிறது. இதனால் நிரந்தர சமாதானத்தை அடைவது அதி அவசர தேவை ஆகும்.

யுத்தத்துக்கு பெருமளவு பணம் செலவிடப்படுவதால் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் உலகிலேயே மிக வறிய நாடுகளில் ஒன்றாக இலங்கை மாறக் கூடிய ஆபத்து இருக்கிறது.

எனவே குறுகிய அரசியல் கண்ணோட்டங்களைக் கைவிட்டு அதிகாரப் பரவாக்கல் யோசனைகள் குறித்து இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் கவனம் செலுத்த வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

''யுத்தம் தொடர்ந்து நடக்குமானால், வருங்கால தலைமுறையினருக்கு பொருளாதார ரீதியில் ஏற்படக்கூடிய மோசமான நிலை குறித்து மாகாணசபைகள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட விளக்கினார்.

நாடாளுமன்றத்தில் இதனை சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெறுவது கஷ்டமாதலால், பொதுமக்களின் அபிப்பிராயத்தை அறிவதற்காக முதலில் சர்வஜன வாக்கெடுப்புக்கு விட முதலில் திட்டமிடப்பட்டிருந்தது தெரிந்ததே. (இ-3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 12 — 01 — 1947

உதிர்வு: 18 — 12 — 1995

அமரர்

**செல்வநாயகம் பத்மநாதன்**

(முன்னாள் யாழ்/போதனா வைத்தியசாலை ஊழியர்)

**திதி: 06 - 01 - 1997**

நீங்காத நினைவுடன் நினைவு கூர்ந்து உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

நாகலிங்க முதலி ஒழுங்கை,
பருத்தித்துறை.

(44515)

## நாலாம் ஆண்டிலும் குமுறுகிறோம்

பிரேமன்



**கந்தையா பிறேமதாசன்**

அன்னையின் மடியில்: **09—06—1974**

வான் அசுரனின் பிடியில்: **06—01—1993**

ஆண்டுகள் நாலாச்சு ஆறாத் துயரோடு
வான்வந்த அரக்கனால் நீசிதறி மண் வீழ்ந்து
சிந்தன்கேணியில் சாவதனை அணைத்தெம்
சித்தம் கலங்க வைத்து சென்ற நீ வருவாயோ!

குடும்பத்தினர்.

| அன்று | இழப்பில் | இன்று |
| --- | --- | --- |
| 'நன்னீஸ்' பெற்றோல்நிலைய ஒழுங்கை, காங்கேசன்துறை. | கலைவாணி வீதி, சித்தன்கேணி. | 'இராஜகிரி' 2-ம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை. |

(44503)

## 5 ஆயிரம் பனம் விதைகள் நடப்பட்டன

கரவெட்டி சோனப்புவெளியில் 5ஆயிரம் பனைவிதைகள் நடப்பட்டன.

இலங்கை பன அபிவிருத்திச் சபையும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவும் இணைந்து இப்பகுதியில் பனை விதை நடும் நடவடிக்கையை மேற்கொண்டன'

## மண்ணை...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும்?

கோழிகள், ஆடுகளை, மாடுகளை வளர்ப்பதில் எத்தனை இலாபம் இப்போது? அவை அடிக்கடி மறைந்து விடும்; கறியாகிவிடும். யாருக்கு? பாதுகாப்புப் படையினருக்குத்தான். கேட்டால் 'அம்மே! அப்படி செய்வோமா?' 'பாதுகாக்க வந்தவர்கள் நாம் அல்லவா?''— என்ற பரிந்துரை.

இந்தக் கொடுமைகள் தென்மராட்சி மக்களுக்கு மட்டுமல்ல; தமிழனாகப் பிறந்த — தன் சொந்த மண்ணில் வாழ்கிற—எல்லோருக்கும் தான். தமிழன் பாவம் செய்தவனா? சொந்த மண் அவனுக்கு இல்லையா? என்ன செய்வது?, யாரிடம் கேட்பது?

இதோ இதை யார் எழுதியது என்ற கேள்வியா? என் பாட்டன், பூட்டன் காலத்திலிருந்தே நாம் வாழ்ந்த எங்கள் சொர்க்க பூமியை விட்டு சொந்த மண்ணை விட்டு — பாதுகாப்புப் படையினரின் வதையினைத் தாங்க முடியாமல் கப்பலேறி வந்து விட்ட ஒரு பாவி. எனக்கு இப்போது வீடில்லை; காணியில்லை; காசில்லை; விலாசமில்லை. என் கதை கேட்க வேண்டாம். நான் ஒரு தனி மனுஷி; முதியவள்; அவ்வ[illegible] [illegible] போவேன்? [illegible] தெரியாது. அன்னையிட்ட அழகான பெயர்உண்டு, சொல்லி என்ன பயன்?

# மேலும் 27 பேரைக் காணவில்லை! ஆணைக்குழுவை நியமியுங்கள்

## ஜனாதிபதிக்கு எம். பி. கடிதம்

கொழும்பு, ஜன. 6

யாழ்ப்பாணப் பகுதியில் மேலும் 27 பேர் இராணுவக் காவலில் இருந்தபோது காணாமற்போய் விட்டனர் என சம்பந்தப்பட்டவர்களின் பெற்றோரும் உறவினர்களும் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட எம். பி. ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்திருப்பதாக கொழும்பிலிருந்து வெளியாகும் வீரகேசரி நாளிதழ்செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த 27 பேரையும் சேர்த்து மொத்தம் 64 பேர் இராணுவக்காவலில் இருந்தபோது காணாமற்போய் உள்ளனர் என்றும் —

இது குறித்து விசாரிக்க உயர் நீதிமன்ற நீதியரசரைத் தலைவராகக் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும்— அவர் அக்கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார் என்றும் அப் பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற்போன 27 பேரின் விவரம் வருமாறு:-

- ★ ரட்ணம் ராஜேந்திரம் (28 வயது - மீசாலை)
- ★ செல்லத்துரை (19வயது- யாழ்ப்பாணம்)
- ★ சின்னத்தம்பி ஜெயேந்திரன் (25 வயது - மீசாலை)
- ★ சின்னராஜா ரஞ்சன் (22வயது - நுணாவில்)
- ★ அப்புக்குட்டி நாகராசா (34 வயது – மீசாலை)
- ★ சண்முகதாஸ் முருகதாஸ் (29 வயது - யாழ்ப்பாணம்)
- ★ பூபாலநேசன் செல்வநேசன் (கல்லடி, யாழ்ப்பாணம்)
- ★ பாலரத்தினம் ஜெயமோகன் (31 வயது – மானிப்பாய்)
- ★ கந்தசாமி நடனசந்திரன் (அளவெட்டி)
- ★ பற்றிக் மேரி ரவி (யாழ்ப்பாணம்)
- ★ பொன்னுத்துரை மகாதேவன் (கொடிகாமம்)
- ★ சிதம்பரப்பிள்ளை பேரின்பநாதன் (21 வயது - கைதடி)
- ★ அரசமுடி கோடீஸ்வரன் (33 வயது – கைதடி)
- ★ கந்தையா கந்தசாமி (33 வயது - யாழ்ப்பாணம்)
- ★ சின்னத்தம்பி சிவகுமார் (31 வயது - கைதடி)
- ★ அந்தோனி திலகரத்தினம் (23 வயது – கைதடி)
- ★ ரட்ணம் செல்வகுமார் (21 வயது - கைதடி)
- ★ பூபாலசிங்கம் பிரபாகரன் (23 வயது - கைதடி)
- ★ சீனியர் தர்மலிங்கம் (41 வயது - சுன்னாகம்)
- ★ பரராஜசிங்கம் கஜேந்திரன் (யாழ்ப்பாணம்)
- ★ செல்லத்துரை சிவராஜா (35 வயது – கைதடி)
- ★ கணேஷ் ரமேஷ்(கைதடி)
- ★ கணேசலிங்கம் கிருபாகரன் (18 வயது - கைதடி)
- ★ தம்பன் பாஸ்கரன் (26 வயது - கைதடி)
- ★ ஸேவியஸ்தாஸ்றெக்ஸ்னிரூபராஜ் (18 வயது - நல்லூர்)
- ★ சொலமன் அருள்நேசன் (34 வயது - மிருசுவில்)
- ★ பரமு சந்திரசேகர் (31 வயது - யாழ்ப்பாணம்)


## புதிய பிரிவுகள்

★ **ஆண்டு 4, ஆண்டு 5**
(புலமைப்பரிசில்)

★ **ஆண்டு 6 - 11 வரை**

**ஆரம்பம்: 06 - 01 - 1997**

மதிப்பீட்டுப் பரீட்சைகளும் தவணைப் பரீட்சைகளும் நடைபெறும்.

அனுமதியை உறுதி செய்து கொள்ளவும்.

**யூனிவேர்சல்**

**கந்தர்மடம்.**

(44529)


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
(சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி உப அலுவலகம்)

## ஆதனவரி அறிவித்தல்

1997 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 1997-01-31 ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்தினால் 10 வீதக் கழிவும், காலாண்டுக்குரிய ஆதனவரியை சம்பந்தப்பட்ட காலாண்டின் முதலாம் மாதத்தில் செலுத்தினால் 05 வீதக் கழிவும் வழங்கப்படும்.

காலாண்டு முடிவுறும் திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் ஆதனவரித் தொகைக்குப் பற்றாணைச் செலவாக வெற்றுக்காணிகளுக்கும், வசிப்பிடங்களுக்கும் 15 வீதமாகவும் ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமாவும் சேர்த்து அறவிடப்படும். எனவே ஆதனவரிகளை சம்பந்தப்பட்ட உப-அலுவலகங்களில் குறித்த தவணையில் செலுத்திச் சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு:-

01. முன்னைய வரி நிலுவைகள் செலுத்தப்பட்ட பின்பே 1997 ஆம் ஆண்டுக்கான வரி ஏற்றுக் கொள்ளப்படும். ஆதனவரியில் மாற்றமில்லை.
02. சேதம் அடைந்ததும் காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரிவிலக்குக்குரிய விண்ணப்பங்கள் 1997-01-31 க்கு முன் கிடைக்கக் கூடியதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
03. கட்டடத் திருத்தங்கள், சட்டட அமைப்புகள், வீதியோர எல்லை அமைப்புகள் முதலானவை இச்சபை அனுமதியுடன் செய்தல் வேண்டும்.

**கா. சந்திரராசா,**
**விசேட ஆணையாளர்,**
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

வலி-மேற்கு பிரதேச சபைத்-
தலைமை அலுவலகம்,
சுழிபுரம், 1997-01-01.

(சி/3862)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சிப் பகுதியில் பரீட்சார்த்த உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கை

வடமராட்சி, ஜன. 5

வடமராட்சிப் பிரதேசத்தில் இம்முறை உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கரவெட்டி, கரணவாய், நெல்லியடி, அல்வாய், புலோலி ஆகிய இடங்களிலும் மற்றும் அம்பன், குடத்தனை ஆகிய இடங்களிலும் பரீட்சார்த்த உருளைக்கிழங்குச் செய்கையை மேற்கொள்வதற்கான சகல ஒழுங்குகளையும் புலோலி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் உருத்திரேஸ்வரன் மேற்கொண்டுள்ளார்.

பரீட்சார்த்த உருளைக்கிழங்கு செய்கையாளர்களுக்கான விதை உருளைக்கிழங்கு இவ்வாரம் வழங்கப்படவுள்ளது.

[இ-173]

## மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை

நவாலி, ஜன. 6

மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை மீண்டும் முன்னைய இடத்தில் மானிப்பாயில் விரைவில் இயங்கவுள்ளது. (இ-100)

## முளைவிடும் வெங்காயம் நடுகைக்கு

வலி-தென்மேற்கு, ஜன. 6

முளைவிடும் வெங்காயத்தை விவசாயிகள் நடுகைக்கு பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

மானிய அடிப்படையில் விதை வெங்காயம் விநியோகிக்கப்பட்டு அதன் விளைச்சல் பெருமளவில் தேங்கிக் கிடப்பது தெரிந்ததே.

இந்த வெங்காயத்தை பலர் மிகக் குறைந்த விலைக்கு சந்தைப்படுத்துகின்றனர். மேலும் சிலர் திரும்பவும் நடுகைக்குப் பயன்படுத்துகின்றனர், (இ-145)


25 ஆவது
வெள்ளி விழா ஆண்டில்

ESTD:- 1973 REGD:- № J/7993

**The Express Institute**

IRUPALAI - KOPAY.

O/L Dec. 97
DAY CLASSES
காலை 8 - 00 - 12 - 30 வரை

ஜனவரி 10 முதல்

| | | |
|---|---|---|
| கணிதம் | — | பிரபல ஆசிரியர் |
| விஞ்ஞானம் | — | திரு. இரா. செல்வவடிவேல் |
| ஆங்கிலம் | — | திரு. S. K. மகாலிங்கம் |
| தமிழ் | — | பிரபல ஆசிரியர் |
| சமூகக்கல்வி | — | பிரபல் ஆசிரியர் |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |

(44402)


# தோட்டத்தில் கிடந்த பொருளை குத்திப்பார்க்க அது வெடித்தது

## கதிரிப்பாயில் சிறுவன் காயம்

யாழ்ப்பாணம். ஜன. 6

சுடுதண்ணீர் போத்தல்மூடி போன்ற அமைப்பில் இருந்த பொருள் ஒன்றை எடுத்த 5 வயதுச் சிறுவன் ஒருவன் அதனைக் குத்திப்பார்த்த போது அது வெடித்துச் சிதறியது. சிறுவன் படுகாயமடைந்தார்.

அச்சுவேலி கதிரிப்பாய்ப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தனபாலன் லக்ஸ்துன் என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவரின் பேரன் தமது தோட்டத்தில் கொத்திக் கொண்டிருந்த போது அப்பொருள் வெளிப்பட்டதாகவும், அதனைத் தூக்கி வெளியே எறிந்தபோதே அச்சிறுவன் அதனை எடுத்துச் சென்று குத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)


## பாராட்டுகின்றோம்

யா/ கோப்பாய்
சரவணபவானந்த வித்தியாலயத்தில்

க. பொ. த. பரீட்சையில் சிறப்புச்சித்தி யெய்திய மாணவர்களான:-

1. சி. ஜெயமயூரன் 4 D 2 C
2. பொ. சுபாசினி 3 D 3 C 1 S
3. க. பிரபாகரன் 3 D 3 C 1 S
4. ந. திருமகள் 1 D 2 C 2 S

ஆகிய மாணவர்களையும் க. பொ. த. உயர் தர வகுப்புக்கு தகுதிபெற்ற மாணவர்கள் 7 பேரையும் ஊக்குவித்த அதிபரையும், கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

ப, மா. சங்கம், பா. அ. சங்கம்,
பா. அ. சபை

யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்,
கோப்பாய். (44516)



மானிப்பாய் கோயில் பற்று பல நோ. கூ. சங்கம்
(வரைவுள்ளது)

## முக்கிய அறிவித்தல்

### கிளைக்குழுத் தேர்தல் - 1997இல்

பின்வரும் கிளைகளில் கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் நியமனப் பத்திரங்களும் ஆட்சேபனைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்:-

திகதி **18-01-1997** சனிக்கிழமை

நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம்: காலை **9.00** மணி தொடக்கம் **10.00** மணிவரை (புதிய நேரம்)

ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம்: காலை **10.00** மணிதொடக்கம் **11.00** மணிவரை (புதிய நேரம்) (கிளை நிலையங்களில்)

| கிளை இலக்கமும் பெயரும் | ஏற்றுக்கொள்ளும் கிளை இலக்கமும் இடமும் |
|---|---|
| 03 கூழாவடி 03 | கிளை 04 ஆனைக்கோட்டை மத்தி |
| 04 ஆனைக்கோட்டை மத்தி | கிளை 04 ஆனைக்கோட்டை மத்தி |
| 10 மானிப்பாய் தெற்கு | கிளை 10 மானிப்பாய் தெற்கு |
| 11 மானிப்பாய் வடக்கு | கிளை 11 மானிப்பாய் வடக்கு |
| 12 கட்டுடை | கிளை 12 கட்டுடை |
| 16 சுதுமலை வடக்கு | கிளை 16 சுதுமலை வடக்கு |
| 17 சுதுமலை மத்தி | கிளை 17 சுதுமலை மத்தி |
| 19 சாவற்கட்டு | கிளை 19 சாவற்கட்டு |
| 20 உயரப்புலம் | கிளை 20 உயரப்புலம் |
| 23 கெல்லாவில் | கிளை 23 கெல்லாவில் |
| 25 மானிப்பாய் வடகிழக்கு | கிளை 25 மானிப்பாய் வடகிழக்கு |

திகதி **19-01-1997** ஞாயிற்றுக்கிழமை

நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம்: காலை **9-00** மணி தொடக்கம். **10.00** மணிவரை (புதிய நேரம்)

ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம்; காலை **10.00** மணிதொடக்கம். **11.00** மணிவரை (புதிய நேரம்) (கிளை நிலையங்களில்)

| கிளை இலக்கமும் பெயரும் | ஏற்றுக்கொள்ளும் கிளை இலக்கமும் இடமும் |
|---|---|
| 05 ஆனைக்கோட்டை | கிளை 05 ஆனைக்கோட்டை |
| 06 நவாலி கிழக்கு | கிளை 06 நவாலி கிழக்கு |
| 07 நவாலி மணிமண்டபம் | கிளை 32 கொத்துக்கட்டி |
| 32 கொத்துக்கட்டி | கிளை 32 கொத்துக்கட்டி |
| 08 நவாலி தெற்கு | கிளை 08 நவாலி தெற்கு |
| 09 நவாலி வடக்கு | கிளை 08 நவாலி தெற்கு |
| 13 சண்டிலிப்பாய் மத்தி | கிளை 13 சண்டிலிப்பாய் மத்தி |
| 14 சண்டிலிப்பாய் வடக்கு | கிளை 15 ஆலங்குழாய் |
| 15 ஆலங்குழாய் | கிளை 15 ஆலங்குழாய் |
| 24 சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி | கிளை 15 ஆலங்குழாய் |

கிளைக்குழுத் தேர்தல் நடத்த வேண்டிய நிலையிருப்பின் 04-01-97ஆம் திகதி சனிக்கிழமை மு. ப. **9 00** மணிதொடக்கம் பி. ப. **4.00** மணிவரை தேர்தல் நடைபெறும். நியமனப்பத்திரங்களை கிளைநிலையங்களில் ரூபா **10.00** செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

த. கந்தசாமி,
தேர்தல் உத்தியோகத்தர்.

பிரதேச செயலகம், வலி-தென்மேற்கு, சண்டிலிப்பாய்.
31—12—1996 (சி/3712)



ஆண்டு மூன்றிலும் ஆறாத நினைவு



சிவநெறிச் செம்மல்
அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்

(சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய தர்மகர்த்தா)
(உரிமையாளர் அம்பிகா மருந்துச்சாலை)

தோற்றம்: 22 - 08 - 1937
சிவபதம்; 06 - 01 - 1994

ஆண்டு மூன்றானதையா
ஆலமரம் நீ சாய்ந்து.
உன் நிழலில் இருந்ததனால்
தென் புடனே நாமிருந்தோம்.
தென்புலத்தார் தேசம்
சென்றாலும் உன்னுருவம்
எம் மனதில் மாறாது.
சிதம்பர விநாயகனின்
சீரடியில் நீ வாழ்க!

- குடும்பத்தினர்

அம்பிகா மருந்துச்சாலை, சாவகச்சேரி.
சரசாலை வடக்கு சாவகச்சேரி.
(சி-3866)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## தொண்டர் நிறுவனங்கள்

நாட்டில் இயங்கி வரும் சகல சர்வதேச தொண்டர் நிறுவனங்களையும் ஒருங்கிணைப்பதற்காகச் சட்டம் கொண்டுவரப்படும் என்றும், அச்சட்டத்தின் கீழ் அவற்றைக் கண்காணிப்பதற்கு என்றே விசேட அமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்றும் செய்திகள் வெளிவந்துள்ளன.

சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு, கண்காணிப்பதற்குச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற குரல் இந்த நாட்டில் நீண்ட காலமாகவே ஒலித்து வருகிறது.

சர்வோதய இயக்கத்தின் தலைவர் ஆரியரத்தினா மீதான பகைமையை மையமாகக் கொண்டு, அந்த இயக்கத்தின் செயற்பாடுகளை நிறுத்தும் நோக்குடன், தொண்டர் நிறுவனங்களைக் கண்காணிப்பது, கட்டுப்படுத்துவது என்ற விடயத்தை ஜனாதிபதி பிரேமதாசா தொடங்கி வைத்தார்.

அதன் பின்னர், விஜேதுங்கா காலத்திலும் தொண்டர் நிறுவனங்களைக் கண்காணிப்பது, கட்டுப்படுத்துவது குறித்து அடிக்கடி பிரஸ்தாபிக்கப்பட்டது. இது பற்றி ஆராய்வதற்காக விசாரணைக் குழு நியமிக்கப்பட்டதும் உண்டு,

வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில், சில நிவாரண உதவிகளை நீதியின் பாற்பட்டுச் செய்வதனைத் தடுக்க வேண்டும் என்பதே அப்போதைய நடவடிக்கைகளின் உள்ளூரமான நோக்கம்.

போர் நடைபெறும் பிரதேசங்களில் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் செயற்படுவதினால், அங்குள்ள உண்மையான நிலைமை, அரசாங்கத்தின் நியாயமற்ற நடவடிக்கைகள், தமிழர் மீதான அடக்கு முறைகள், அரசு நடத்தும் அழிவுகள் பற்றிய தகவல்கள் கசிந்து விடுகின்றன என்பதனை மனதிற் கொண்டே கண்காணித்தல், கட்டுப்படுத்தல் குறித்துத் தீவிரமாக ஆராயப்பட்டது.

இப்போது மீண்டும் சர்வதேச தொண்டர் நிறுவனங்களைக் கண்காணிப்பது, கட்டுப்படுத்துவது குறித்து அக்கறையுடன் பேசப்படுவதற்கும், செய்திகள் வெளியாவதற்கும் விசேட காரணம் ஒன்று உண்டு.

வடக்கு — கிழக்கில் நடைபெறும் போரை நிறுத்தி சமாதான வழியில் தமிழர்களுக்கு நியாயமான தீர்வை வழங்குமாறு சர்வதேச சமூக மட்டத்தில் அரசாங்கத்துக்கு அழுத்தம் இருந்து வருகிறது.

சர்வதேச தொண்டர் நிறுவனங்களே தத்தமது நாட்டு அரசுகளுக்கு தரவுகள், தகவல்களைக் கொடுத்து மறைமுக அழுத்தத்துக்குத் தூண்டுதலாக இருக்கின்றன என்று அரசு உயர் அதிகாரிகள் கருதுகிறார்கள்.

அதனாலேயே சர்வதேச தொண்டர் நிறுவனங்களை கட்டுப்படுத்தவும், கண்காணிக்கவும் சட்டம் கொண்டு வரப்படுவது குறித்து மீண்டும் பேசப்படுகிறது எனலாம்.

# தமிழ்க் கட்சிகள் அலுவலகம் திறப்பு: அரசின் தந்திரோபாய நடவடிக்கை

கொழும்பு, ஜன. 6

எதுவித ஆரவாரமும் இன்றி தமிழ் மிதவாதக் கட்சிகளை யாழ்ப்பாணத்தில் அலுவலகம் அமைக்க அரசு அனுமதித்திருப்பது, அரசின் தந்திரோபாய உத்தியின் ஓர் அங்கமே என்று ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார்.

எதுவித பிரசாரமோ, ஆரவாரமோ இன்றித் தமிழ் மிதவாதக் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் அலுவலகம் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன் ஆயுதம் தரித்த மெய்ப்பாது காவலர்களை அழைத்துச் செல்லவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

நகருக்கு வெளியே வலிகாமம் பகுதிக்குச் செல்ல அவர்களுக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்படும்.

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ்தேவானந்தா ஏற்கனவே யாழ்ப்பாணம் சென்று விட்டார். ஏனைய கட்சிகளின் தலைவர்களும் யாழ்ப்பாணம் செல்ல அரசு அனுமதிவழங்கியுள்ளது.

இந்த விவகாரம் குறிப்பிடத்தக்க மாற்றம் மட்டுமல்ல, அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளின் தந்திரோபாய உத்தியாகவும் கருதப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இயல்பு நிலையைக் கொண்டு வரும் அரசின் முயற்சியில் தமிழ்க் கட்சிகளைப் சம்பந்தப்படுத்துவது, மக்களின் மனதில் இடம்பிடிப்பது போன்ற செயற்பாடுகளினால் அரசியல் தீர்வு யோசனைகளுக்கான கருத்துக்கணிப்பில் வெற்றியையும் பெறமுடியும் என அரசு கருதுகிறது.

கருத்துக் கணிப்புக்கு சிங்களவர்கள் இரண்டாக பிரிந்து வாக்களிப்பர். சிறுபான்மை மக்களின் வாக்கைப் பெறுவதன் மூலமே கருத்துக்கணிப்பில் வெற்றி பெறமுடியும்.

இதற்காக அரசு இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் வகையில் கையாளும் அரசியல் தந்திரோபாயத்துடன் இராணுவ தந்திரோபாயமும் இணைந்துள்ளது என்று — இக்பால் அத்தாஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

## மத பிரதிஷ்டம்

கொழும்பு, ஜன. 6

அருட்திரு திஸ்ஸ பாலசூரியா பாப்பரசர் 2 ஆவது அருளப்பர் சின்னப்பரினால் திருச்சபையில் இருந்து விலக்கப்பட்டுள்ளார் என இலங்கை வானொலி அறிவித்தது.

'தேவமாதாவும், மனித விமோசனமும்' என்ற அவரது நூலில் ஞானஸ்தானம், பாவம் சம்பந்தமான அடிப்படையான றோமன் கத்தோலிக்க சத்திய வசனங்கள் குறித்து சந்தேகம் தெரிவித்திருந்தார் என்று கூறப்படுகின்றது.

இதனை மாற்றிக் கொள்ள அவர் மறுத்ததாலேயே திருச்சபையில் இருந்து அவர் விலக்கப்பட்டுள்ளதாக வத்திக்கான் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## இலங்கை மீனவர் மீட்கப்பட்டனர்

புதுடில்லி, ஜன. 6

கன்னியாகுமரி மாவட்டத்தின் சின்னத்துரை கடற்பகுதியில் நேற்று முன்தினம் தமது படகில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தத்தளித்துக் கொண்டிருந்த நான்கு இலங்கை மீனவர்கள் இந்திய மீனவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளனர். அவர்களைப் பொலீஸார் கைது செய்து காவலில் வைத்திருப்பதாகத் தெரிவித்தனர்.

## 'சூரிய வெற்றி' நடவடிக்கை பூர்த்தி!

கொழும்பு, ஜன. 6

மட்டக்களப்பு படுவாங்கரை நோக்கிய ''சூரிய வெற்றி'' இராணுவ நடவடிக்கையை முடித்துக் கொண்டு படையினர் திரும்பிவிட்டனர் என்று கொழும்புப் பத்திரிகை செய்திகள் தெரிவித்தன. ஆயித்தியமலையில் முகாம் அமைக்க படையினர் ஏற்பாடு செய்தனராயினும், பின்னர் அதைக் கைவிட்டு நேற்று முன்தினம் முகாம்களுக்கு அவர்கள் திரும்பிவிட்டனர் என்றும் அந்த செய்திகள் தெரிவித்தன.

(உ-3-150)

## ஆஸ்பத்திரி புனரமைப்பு

தென்மராட்சி, ஜன. 6

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வார்ட்டுகள் ஏனைய கட்டடங்கள் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் சாவகச்சேரி நகர்ப் பகுதி வர்த்தகர்களால் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

(உ-117)

## கருத்துக் கணிப்பு நடத்த தயாராகிறது தேர்தல் பிரிவு

அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைத்து நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்துக்கணிப்புக்காக தேர்தல் திணைக்களம் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கருத்துக்கணிப்பை நடத்த முப்பது கோடி ரூபா செலவாகும் என்றும் —

சிறிய வாக்காளர் அட்டை மூலம் கருத்துக் கணிப்பு நடத்தினாலும் ஒரு பொதுத் தேர்தலுக்கு செய்ய வேண்டிய அனைத்து பணிகளும இதற்கும் செய்ய வேண்டியுள்ளது என்றும் — தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-3150)

## தமிழரை விசாரிக்க தனி மேல் நீதிமன்றம்

தமிழ்க் கைதிகளை விசாரிக்க வசதியாக தனியான மேல் நீதிமன்றம் ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை விசாரிக்க தனியான மேல் நீதிமன்றம் அமைப்பதன் மூலம் அவர்களை விரைவில் விடுதலை செய்ய உதவ முடியும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் விடுத்த கோரிக்கையையடுத்தே தாம் இந்த நடவடிக்கையை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் மூடப்பட்டுள்ள தொழில் நீதிமன்றத்தை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சிவசிதம்பரம் அமைச்சரிடம் கேட்டுள்ளார். (உ-3)

## மூன்று சர்வதேசப் பிரமுகர்கள் மத்தியஸ்தத்துக்கு விருப்பம்

கொழும்பு, ஜன. 6

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பேச்சுக்களுக்கு மத்தியஸ்தம் வகிக்க மூன்று பிரமுகர்கள் குழு ஒன்று தயாராக இருப்பதாகத் தெரிவித்து இலங்கையின் அமைதிக்கான கனேடிய ஸ்தாபனம் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தின் சாராம்சம் வருமாறு:—

சமாதானப் பேச்சுகளுக்கு புலிகள் இயக்கம் தயாராக விருக்கிறது. முன் நிபந்தனை எதுவும் இன்றி பேச்சு மேசைக்கு இருதரப்பும் வரவேண்டும். பேச்சுக்கு மத்தியஸ்தம் செய்யும் குழு பேச்சுக்கான நடைமுறைகளைத் தயாரிக்கும்.

தற்போதைய நிலைமை பேச்சுக்கு நல்ல தருணமாகும், ஒரு தசாப்த காலமாக இடம் பெற்றுவரும் அழிவுகளும் இன்னல்களும் நீங்க வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியஸ்தம் செய்ய விரும்பும் மூன்று பிரமுகர்கள் தொடர்பான விவரமும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. விவரம் வருமாறு;-

★ பில் கிரஷாம் — கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்; கனேடிய வெளிவிவகார, வர்த்தக நிலையியற் குழுவின் தலைவர்.

★ நட்ஸ் பேர்கல் —பாரிஸ்டர்.

★ ஜோன் சோலா—அமெரிக்காவின் குறோஷியன் நாட்டுத் தூதுவர்.

(உ-3-150)

### நாளை

**மார்கழி 25**

**செவ்வாய்க்கிழமை**

**திதி:** திரயோதசி பிற்பகல் 2. 41 வரை.

**நட்சத்திரம்:** கேட்டை பிற்பகல் 4. 01 வரை.

**ராகுகாலம்:** 3. 32-5. 02

**சுபநேரம்:** 11.02-12.32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## பொதுமக்களின் சார்பில் இது ஒரு வேண்டுகோள்

கடந்த இரண்டு மாதகாலமாக ''றோயல் பிளஸ்'' எனப் பெயரிடப்பட்டு வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்குப் பகுதிகளில் படையினரால் இராணுவ நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நடவடிக்கையின் போது பல பொதுமக்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் சிலரை படையினர் வீடுகளில் சென்று கைது செய்திருந்தனர். எனினும், உறவினர்கள் கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய நிலைமையை விசாரிக்க படை முகாம்களுக்குச் சென்றவேளையில், தாம் கைது செய்யவில்லை என உறவினருக்குப் பொறுப்பற்ற விதமாகப் பதிலளிக்கப்பட்டுள்ளது.

படையினரின் இப்பதிலினால், கைது செய்யப்பட்டவர்களின் நிலை பற்றி அறிவதற்காக, உறவினர்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அலுவலகத்துக்கும், யாழ். பொலீஸ் நிலையத்துக்கும் அலைந்து திரியும் நிலைமையையும் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் நாளாந்தம் உழைத்து தமது உணவுப் பாட்டினைப் பார்க்கும் இக்குடும்பங்கள், தமது குடும்ப உழைப்பாளர்களை இழந்து பரிதவிக்கும் நிலைமையும் உள்ளது.

மேலும், படையினர் தாம் கைது செய்யவில்லை எனக் கூறுவதால் இவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டதா (அதாவது படையினரின் துன்புறுத்தலின் போது இறந்துவிட்டனரா) என்ற கேள்வியும் இவ்வூர் மக்கள் மத்தியில் உள்ளது.

இவ்வாறு காணாமற்போன சிலரின் பெயர் விவரங்களையும் உதாரணத்துக்குத் தர முடியும்.

1. கந்தையா சிவானந்தராஜா (வயது 36), மூத்த நயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை.

2. செ. செல்வராஜா (வயது 50), மாட்டொழுங்கை, ஆனைக்கோட்டை.

### வாசகர் திருமுகம்

இவர்கள் இருவரும் 1996 டிசம்பர் மூன்றாம் திகதியன்று இவர்களின் வீடுகளில் படையினரால் கைது செய்யப்பட்டனர். ஆனால் தாம் அவர்களைக் கைது செய்யவில்லை என்று படையினரால் உறவினருக்குக் கூறப்பட்டுள்ளது.

''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின் பின்னர் சென்ற ஏப்ரலில் மக்கள் படையினரில் நம்பிக்கை வைத்தே வலிகாமம் திரும்பி வந்தனர் என்று பத்திரிகைச் செய்திகளில் படைத்தரப்பால் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. ஆனால் படையினரின் கைது செய்தல், காணாமற்போகச் செய்தல் எனும் செயற்பாடுகளால் மக்களுடனான இடைவெளி அதிகரித்துச் செல்லும் நிலைமை உருவாகின்றது.

இதனைப் படைத்தரப்புக்கு எதிரான விமர்சனம் என்று எண்ணி இந்த அபிப்பிராயத்தை எழுதும் என்மேல் அவர்கள் நடவடிக்கை எதுவும எடுக்க மாட்டார்கள் என நம்புகிறேன்.

ஆனால் நம்பி வந்தோம்; ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்றவாறு மக்களால் கதைக்கப்படுகிறது. ஆகையால், இதனைத் தங்களை நம்பி வந்தோரின் பிரச்சினை என்று கருதி படைத்தரப்பினர் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகின்றேன்; வேண்டுகின்றேன்.

மேலும், யாழ். குடாநாட்டில் இருந்து வெளிவரும் செய்தித் தினசரி உதயனே. ஆனால் குடாநாட்டில் படைத்தரப்பாலும் புலிகள் தரப்பாலும் கைது செய்யப்படுவோர் பற்றிய செய்திகள் உதயன் பத்திரிகையில் வெளிவருவது இல்லை.

சமீபகாலங்களில் கூட பலர் இரு தரப்பாலும் கைது செய்யப்பட்டு உள்ளனர். இது பற்றிய செய்திகள் பத்திரிகையில் வெளிவருவது இல்லை என்பது மறைமுகமாக உதயன் பத்திரிகை தணிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றதா எனும் கேள்வியை வாசகர் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் தோற்றுவித்துள்ளது.

உதயன் பத்திரிகை உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும் என்பதே, உதயனின் நீண்டகால வாசகனான எனது அவாவாகும்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இவ்வாசகரின் பாதுகாப்புக்கருதி, அவரது பெயரைத் தவிர்த்துள்ளோம். (ஆ–ர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கடற்படை அதிகாரி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
கள் இல்லை என்று கூறப்பட்டது.

யாழ்ப்பாணத்தை கைப்பற்ற முன்னர் விமானப்படையில் உள்ள சிரேஷ்ட அதிகாரிகள் விலகிச் சென்று கொண்டிருந்தனர். ஆனால் தற்சமயம் விலகிச் செல்வோர் எண்ணிக்கை குறைந்துள்ளது.

கடற்படையை விட்டுச் செல்வோர் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளதால், ஏன் அவர்கள் விலகிச் செல்கிறார்கள் என்பதை கண்டறிய அரசு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். — என்று அந்தப் பத்திரிகை கூறியுள்ளது. (உ-3-150)


# கண்ணீர் அஞ்சலி

எமது சக பாதுகாவலர் திரு. கருணாரட்ணம்
அவர்களின் அன்பு மனைவி
திருமதி
அன்னராணி கருணாரட்ணம்

அவர்கள் காலமானதையிட்டு, அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த கவலையையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பாதுகாப்பு பகுதியினர்.**

உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம். (சி/3869)

# ஏலைற் கல்வி நிறுவனம்

1997 புதிய மாலை நேர வகுப்புகள்
ஆண்டு 3 தொடக்கம் G. C. E. O/L வரை
ஆண்டு 5 புலமைப்பரிசில்
வகுப்புகளுடன் ஆரம்பமாகியுள்ளன.
99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(ஐந்து சந்தி அருகாமை) (44536)

கோப்பாய்
# பரி. கன்னிமரியாள் ஆலய பாலர் பாடசாலை

**15 - 01 - 1997 இல் ஆரம்பம்**
அனுமதி கோருவோர் 14 - 01 - 1997 -க்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

**சபைக் குரு,**
கோப்பாய் மத்தி, கோப்பாய். (44532)

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்
'அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து அவரை துதிப்போம் — சங்: 100:4

பளையில்
# எக்காளத்தொனி
பூரண சுவிசேஷ சபை
# திறப்புவிழா

**இடம்:** கச்சார் வெளி - பளை.
**காலம்:** 07-01-1997 செவ்வாய்க்கிழமை
முற்பகல் 10-00 மணிக்கு

எக்காளத்தொனி சர்வதேச ஊழியங்களின் ஸ்தாபகரும், நிர்வாகியும், சர்வதேச பிரசங்கியாருமாகிய
அருட்திரு
மேவின் குணசெல்வம் அவர்களால்
ஜெபத்துடன் திறந்து வைக்கப்படும்.
யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.
(44539)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கந்தையா காசிப்பிள்ளை
(மாதகல்)

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சி. சிவலிங்கம்
(பெறாமகன்)

கண்டி வீதி,
கொழும்புத்துறை. (சி/3870)


## கிறீஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
டனர்.

இவர்கள் இருந்த கப்பல் கடந்த 24 ஆம் திகதி இத்தாலிக்கு அப்பால் கிரேக்கக் கடலில் நிறுத்தப்பட்டிருந்தது.

அதிலிருந்து மீன்பிடி றோலர்கள் மூலம் இத்தாலிக் கரைக்கு அவர்களை அழைத்துச் செல்லத் திட்டமிடப்பட்டதாம்.

இதன்படி கப்பலில் இருந்தவர்களில் அரைப்பங்கினர் றோலர் ஒன்றில் ஏற்றப்பட்டனர். றோலரில் ஏறியவர்களில் 148 பேர் இலங்கைத் தமிழர்கள்.

கரை நோக்கி புறப்பட்ட றோலரில் திடீரென வெடிப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதனால் பயணிகளைக் காப்பாற்றும் நோக்குடன் றோலர் மீண்டும் கப்பலை நோக்கி வேகமாகத் திசை திருப்பி விடப்பட்டது. அவ்வாறு வந்த றோலர் கப்பலுடன் மோதி இரண்டாகப் பிளந்ததாகவும் றோலரில் இருந்த பயணிகள் கடும் குளிர்கால வேளையில் நீருள் கூண்டோடு மூழ்கியதாகவும் கூறப்படுகின்றது.

நீரில் மூழ்கியவர்களில் ஆறு இலங்கைத் தமிழர்கள் மீட்கப்பட்டனர். எஞ்சியோர் உயிரிழந்து விட்டதாகக் கருதப்படுகின்றது.

கப்பலில் தங்கியிருந்த எஞ்சியோர் கிரேக்க பொலீஸாரால் மீட்கப்பட்டு கைது செய்யப்பட்டனர். அவர்களில் 41 பேர் இலங்கைத் தமிழர்கள் ஆவர்.

இச் சம்பவத்தை அடுத்து அக்கடல் பகுதியில் கிறீஸ், இத்தாலி, மோல்ற்றா ஆகிய நாடுகளின் படைகள் வான், கடல் வழித் தேடுதல்களை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன.

— இவ்வாறு செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (உ-3-150)

## கிழக்கில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஆர். பி. ஜி, ரக ஆயுதங்களை பயன்படுத்தி தாக்குதல் நடத்திய போது இரு படையினர் கொல்லப்பட்டனர். அவர்கள் பயணம் செய்த வாகனமும் நிர்மூலமாகியது.

அதேநேரம், புனாணை அணைக்கட்டுச் சந்திக்கு அருகில் நேற்று முன் தினம் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய மற்றொரு தாக்குதலை படையினர் முறியடித்தனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

கந்தளாய் வான்எல பொலீஸ் காவல் நிலையம் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை 1.15 மணிக்கு நடத்திய தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக இலங்கை வானொலி அறிவித்தது.

இத்தாக்குதலின் போது இரு ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டனர். மற்றும் இருவர் காயமுற்றனர்.

இச்சம்பவத்தில் புலிகள் தரப்பில் இருவர் உயிரிழந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

நேற்று முன்தினம் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த படையினரின் வாகனம் ஒன்று கொக்குவில் என்ற இடத்தில் புலிகளின் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது. அதில் பயணம் செய்த 19 படையினரும், பொதுமகன் ஒருவரும் காயமடைந்தனர். இவர்கள் பொலனறுவை ஆஸ்பத்திரியில் தற்போது சேர்க்கப்பட்டுள்ளனர்.

அம்பாறைமாவட்டம் மாந்தீவில் விசேட அதிரடிப்படையினர் புலிகள் போராளி ஒருவரை நேற்று முன்தினம் தாங்கள் கொன்றதாக அறிவித்தனர்.

வாழைச்சேனைப்பகுதியில் [illegible] (உ-3-5)

# பாதுகாப்பு அமைப்புகளின் நிலையம் நகருக்கு வெளியே!

## ஒன்றாக அமைக்க முடிவு

கொழும்பு, ஜன. 6

பாதுகாப்பு அமைச்சு கட்டடம், முப்படைகளின் தலைமையகம், பொலீஸ் தலைமையகம் ஆகியவற்றை கொழும்புக்கு வெளியே தனியான இடத்தில் ஒன்றாக அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்புக்கு வெளியே இராணுவ முகாம் ஒன்று அமைந்துள்ள பகுதியில் இந்த பாதுகாப்பு அமைப்புக்களின் கட்டடத் தொகுதியான (Complex) அமைக்க காணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ''பெண்டக்கன்'' பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது போன்றதாக இந்தக் கட்டடத் தொகுதி அமையும் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் பாதுகாப்பு தலைமையகங்கள் நகரின் மத்தியில் அமைந்துள்ளதால் மக்களுக்கு பாதுகாப்பு அச்சம் நிலவுவதாலும் —

படையினரின் வாகனங்கள் வீதிகளால் செல்லும் போது மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகளால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை நீக்கும் வகையிலும் —

இந்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

## ஈ.பி.டி.பி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
தேவானந்தா உதயனுக்குப் பேட்டியளித்தார். தமது கட்சி யாழ். குடாநாட்டில் உடனடியாகக் கவனம் எடுக்கவுள்ள 11 விடயங்களை அவர் குறிப்பிட்டார்.

அவை வருமாறு;-

★ உணவு விநியோகத்தைச் சீராக்குதல், போஷாக்கான — சத்துணவு — மக்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்துதல்.

★ மருத்துவ, சுகாதார வசதிகளை உறுதிப்படுத்துதல். யாழ். ஆஸ்பத்திரியை தரமான மருத்துவமனையாக ஸ்தாபித்தல். குடாநாட்டில் நுளம்பு, இலையான் தொல்லைகளை ஒழித்தல்.

★ போக்குவரத்து வசதிகளை ஒழுங்கு படுத்துதல் வீதிகளை சீர்படுத்துதல் போக்குவரத்துக் கட்டணங்கள் மற்றும் கொழும்பு — யாழ். பயண ஒழுங்குகளை நெறிப்படுத்தி மக்களின் கஷ்டத்தை நீக்குதல்.

★ குடாநாட்டின் கல்வித் தரத்தை சீர் செய்யவும் தரமுயர்த்தவும் உறுதியான நடவடிக்கைகளை எடுத்தல். கம்பியூட்டர் கல்வி போன்றவற்றை அறிமுகப்படுத்தி மாறும் உலகில் எமது மக்களின் கல்வித்தரத்தை பேணுதல்.

★ மக்களுடைய பாதுகாப்பு, தனிமனித சுதந்திரம் — கௌரவம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதும் கருத்துச் சுதந்திரம் உட்பட அடிப்படை மனித உரிமைகள் மதிக்கப்படுவதைப் பேணுவதும்.

★ கள்ளச் சந்தை, பதுக்கல், நியாயமற்ற விலையேற்றம், லஞ்சம், ஊழல் ஆகியவற்றை அடியோடு ஒழிப்பதற்கு ஸ்திரமான நடவடிக்கைகளை எடுத்தல், அரச அதிகாரிகளின் குளறுபடிகளை அம்பலப்படுத்தி, நிர்வாகம் சீராகுவதைக் கவனித்தல்.

★ விவசாயம் மற்றும் உற்பத்தித்துறைகளை ஊக்குவித்தல், விவசாய உள்ளீடுகள் உரிய காலத்தில் நமது விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்தல், உற்பத்தித் துறையை நவீனமயப்படுத்துவதற்கான வசதிகளைக் கிடைக்கச் செய்தல்.

★ தொலைத் தொடர்பு, தபால் துறைகளில் நிலவக் கூடிய குளறுபடிகள், முறையற்ற செயல்களை நீக்கி உரிய சேவையை மக்களுக்குக் கிடைக்கச் செய்தல்.

★ வணக்க ஸ்தலங்களை மீட்டெடுத்தல், கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் போன்ற புனித இடங்களில் எவரின் தலையீடும் இல்லாமல் பூசை,ஆராதனை, வழிபாடுகள் ஒழுங்காக இடம்பெற வழிசெய்தல்.

★ குடாநாட்டு மக்கள் அனைவருக்கும் மின்சார வசதியைப் பெற்றுக் கொடுத்தல்.

★ வன்செயல்கள் மற்றும் நடவடிக்கைகளினால் மக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் சொத்துடமை இழப்புகளுக்கு உரிய நஷ்டஈடு பெற்றுக் கொடுத்தல்.

— இவ்வாறு தேவானந்தா குறிப்பிட்டார்.

(தமது கட்சியின் அரசியல் செயல்பாடுகள் குறித்து அவர் தெரிவித்த பிற கருத்துக்கள் பின்னர் பிரசுரமாகும்).

## வன்னிப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
அரசாங்கம் வழங்கிய மன்னிப்புக் காலத்தில் 11 ஆயிரத்து 205 படையினர் மீளப் படையில் சேர்ந்தமைக்காக பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த, இராணுவத் தளபதி றோஹான் தலுவத்த ஆகியோர் மகிழ்ச்சி வெளியிட்டனர். இந்த மகிழ்ச்சியைக் கொண்டாட ஓர் ஒன்று கூடலும் (Party) அங்கு இடம் பெற்றது.

படைக்கு ஆள் திரட்டுவதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் போது முதல் தடவை 1,128 பேரும் இரண்டாம் தடவை 996 பேரும் படைகளில் சேர்ந்துள்ளனர் —என்று அப் பத்திரிகை செய்தி குறிப்பிட்டுள்ளது. (உ-3-150)

## 1997 இல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
லைப் புலிகளை கொண்டு வந்தால், சகல அரசியல் கட்சிகளும் கருத்துடன்பாடு கண்டு பிரச்சினைக்கு தீர்வு காணலாம். விடுதலைப் புலிகள் பங்குபற்றாத தீர்வின் மூலம் அமைதி ஏற்படும் என்று எவரும் எதிர்பார்க்க மாட்டார்கள்.

புலிகள் பங்குபற்றாத தீர்வை கொண்டு வந்தாலும், அது பிரயோசனமற்றதாக இருக்கும். புலிகள் கைகளிலேயே எல்லாம் தங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தையும், கிளிநொச்சிப் பாதையையும் பிடித்துவிட்டதால் யுத்தம் முடிந்து விட்டதா? முல்லைத்தீவில் பெரிய காட்டின் இரு பகுதியிலும் புலிகள் உள்ளனர்.

புலிகளின் தலைகளுக்கு மேல் எப்படி யோசனைகளை அமுல் செய்யப்போகிறீர்கள்? ஒருபோதும் நடக்க முடியாத காரியம் இது.

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்த முடியாது போனமை இதற்கு சாட்சியமாக உள்ளது.

தேசியப் பிரச்சினைகளில் ஐ. தே. க. விரோதமாக செயற்படுவதாகக் கூறப்படுகிறது. தேசிய பிரச்சினையில் ஐ. தே. க. அரசுடன் சேர்ந்து செயல்பட தடுப்பது எது? ஜனாதிபதி சந்திரிகாவின் ஐ. தே. க. விரோத செயலேதான். ஐ. தே. க. வுடன் நல்லெண்ணம் உருவாக வேண்டுமானால் அதற்கு விரோத நடவடிக்கைகளை அரசு நிறுத்தவேண்டும் — என்றார். (உ-3-150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06 - 01 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org